**செய்தி வெளியீடு எண்: 152** **நாள்: 01.03.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (1.3.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ‘‘திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு’’ திட்டத்தின் கீழ் 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த 50 மாணவ, மாணவியர்களுக்கு தலா 10,000 ரூபாய் வீதம், மொத்தம் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்கள். மேலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் 13 மாணவர்கள் மலேசியாவிலுள்ள சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வு மேற்கொள்வதற்காக செல்வதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

தமிழ் வளர்ச்சித் துறையில் ‘‘திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு’’ எனும் திட்டத்தின் கீழ் 1330 குறட்பாக்களையும் ஒப்புவிப்பு செய்யும் மாணவ, மாணவியர்கள் ஆண்டுதோறும் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 10,000/– ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் 2017–2018ஆம் ஆண்டில் 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த 50 மாணவ, மாணவியர்கள் தெரிவு செய்யப்பட்டு அம்மாணவ, மாணவியர்களுக்கு தலா 10,000/– ரூபாய் வீதம், மொத்தம் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் 2017–2018ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் மாணவர்கள் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தம் முனைவர் பட்ட ஆய்வின் ஒரு பகுதியை மேற்கொள்ளவும், வெளிநாட்டில் தமிழ் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் மாணவர்கள் இந்நிறுவனத்திற்கு வருகை தந்து ஆய்வு செய்வதற்கும் ஏதுவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றம் எனும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டுவரும் மாணவர்களுள் தெரிவு செய்யப்பட்ட 13 மாணவர்கள் மலேசியாவிலுள்ள சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் 27 நாட்கள் தங்கி தமது ஆய்வின் ஒரு பகுதியை மேற்கொள்ளவும், களப்பணி ஆற்றிடவும் மார்ச் திங்கள் 4–ஆம் நாள் மலேசிய நாட்டிற்கு செல்லவுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட அம்மாணவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 1.3.2018**